# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 87/பேரூ/2024**

**நாள்: 03.03.2025**

(1) திருமதி. ச. சத்யா, தலைவர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றம் --
ஈரோடு மாவட்டம்

(2) திருமதி. ஜெ. சம்பூரணம்
6வது வார்டு மன்ற உறுப்பினர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றம்
ஈரோடு மாவட்டம்

(3) திருமதி. எஸ். கஸ்தூரி
7வது வார்டு மன்ற உறுப்பினர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றம்
ஈரோடு மாவட்டம்

(4) திருமதி. எஸ். பி. தவமணி
13வது வார்டு மன்ற உறுப்பினர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றம்
ஈரோடு மாவட்டம்

} முறையீட்டு மனுதாரர்கள்

(1) திரு. த. இராமச்சந்திரன் --
செயல் அலுவலர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்

(2) திரு. ஆர். விஜயன்
(முன்னாள் செயல் அலுவலர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்)
தற்போது செயல் அலுவலர்
அத்தனூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

(3) திரு. L. சண்முகம்
5வது வார்டு மன்ற உறுப்பினர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றம்
ஈரோடு மாவட்டம்

} எதிர்மனுதாரர்கள்

ஈரோடு மாவட்டம், பாசூர் வழி, கொளாநல்லி அஞ்சல், துண்டுக்காட்டூர் என்ற முகவரியைச் சேர்ந்த வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. ச. சத்யா என்பவரின் 31.07.2024 நாளிடப்பட்ட மனுவுடன், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 6வது வார்டு உறுப்பினர் திருமதி ஜெ. சம்பூரணம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 7வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ் கஸ்தூரி மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 13வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ். பி. தவமணி ஆகியோர்களின் மனுக்கள், இம்முறைமன்ற நடுவத்தில் 02.08.2024 அன்று பெறப்பட்டு 87/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

ஈரோடு மாவட்டம், பாசூர் வழி, கொளாநல்லி அஞ்சல், துண்டுக்காட்டூர் என்ற முகவரியைச் சேர்ந்த வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. ச. சத்யா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டாம்பரப்பு முதல்நிலை பேரூராட்சியில் 8வது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்று பேரூராட்சி மன்ற தலைவராக கடந்த 04.03.2022–ம் தேதி வெள்ளிக்கிழமை பதவி ஏற்றுக் கொண்டேன். வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் சிறப்பாக நாளது தேதி வரை பணியாற்றி வருகின்றேன்.

எனது வார்டில் 2022–23ம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் (நிபந்தனையற்ற மானிய நிதி) (Untied Basic Grant)-ன் கீழ் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் வார்டு எண்.08, பெரியூர் ஜானகி வீடு முதல் தங்கவேல் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் சண்முகம் ஆசிரியர் வீடு முதல் பழைய வடிகால் வரை வார்டு எண்.01, வடுகனூர் வி.கே. சண்முகம் வீடு எதிர்புறம் முதல் பழைய வடிகால் வரை வடிகால் வசதி செய்தல்) பணியினை எடுத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும், 09.03.2023–ஆம் தேதிய மன்ற கூட்டத்தில் 2022–2023–ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் முதல் தவணை (நிபந்தனையற்ற மானிய நிதி) (Untied Basic Grant)-யின் கீழ் பணிக்கான ஒப்புதலுக்கு பொருள் சேர்க்கப்பட்டு 09.03.2023 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் திரு. எல். சண்முகம் 5வது வார்டு உறுப்பினர் கலந்து கொண்டுள்ளார். இத்தீர்மானம் நிறைவேற்றும் பொழுது திரு. எல். சண்முகம் எவ்வித ஆட்சேபணையும் பதிவு செய்யவில்லை. சம்பந்தப்பட்ட வார்டு பொதுமக்களும் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. இவர் எனது வார்டில் நடைபெற்ற திட்டப் பணியில் எதாவது சதி செய்து தமிழக அரசிற்கும் இப்பேரூராட்சி மன்றத்திற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக்கும் வெளோட்டாம்பரப்பு பொதுமக்களிடையே அவப்பெயர் உண்டாக்கும் விதமாக புகார் அளித்துள்ளார்.

மேலும், இவர் மீது 06 மற்றும் 07வது வார்டு பெண் மன்ற உறுப்பினர்கள் அடிக்கடி புகார் தெரிவிக்கின்றனர். தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிக்கும் எங்களது

வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி பொதுமக்களிடையே அவப்பெயர் ஏற்படுத்துதல் மற்றும் உள்நோக்கத்தோடு புகார் அளிக்கும் 5வது வார்டு உறுப்பினர் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க தங்களை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

மேலும், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 6வது வார்டு உறுப்பினர் திருமதி. ஜெ. சம்பூரணம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 7வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். கஸ்தூரி மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 13வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ். பி. தவமணி ஆகியோர் தனித்தனியாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுக்களில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர்:-

"வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியின் 5வது வார்டு உறுப்பினர் திரு. எல். சண்முகம் என்பவர் அடிக்கடி எனது வார்டில் தலையிட்டு பொதுமக்களிடம் எனது வார்டு சம்பந்தமாக மன்றக் கூட்டத்தில் எதையும் பேசுவதில்லை என்பதாகவும், எனது வார்டிற்கு புதிய திட்டப்பணிகள் குறித்து விவாதிப்பதில்லை என்றும், எனது வார்டிற்கு எந்த ஒரு திட்டப் பணியும் செய்ய போவதில்லை என்றும் அவதூறாக பொது மக்களிடம் பேசி வருகின்றார்.

மேலும் நான் பெண் கவுன்சிலர் என்பதால் அடிக்கடி என்னிடம் பிரச்சனை செய்து வருகிறார். எனது வார்டு சம்பந்தமான மன்றக் கூட்டத்தில் பொருள் சம்பந்தமாக விவாதிக்கும் போது அடுத்த வார்டு கவுன்சிலரான இவர் எனது வார்டில் தலையிட்டு என்னை மரியாதை குறைவாக பேசி வருகின்றார். மன்றத் தலைவர் திருமதி ச. சத்யா அவர்களிடம் இது பற்றி ஏற்கனவே பேசியுள்ளேன்.

எனது வார்டு சம்பந்தமாக மன்ற கூட்டத்தில் விவாதிக்கும்போது குறுக்கே தலையிடாமலும், என்னை மரியாதை குறைவாக மன்ற கூட்டத்தில் மற்றும் பொது மக்களிடமும் பேசாமல் இருக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்படி நபர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளனர்.

2. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. த. ராமச்சந்திரன் என்பவர் தனது 03.09.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1566/2018–5/அ1 நாள் 09.08.2024ன்படி ஈரோடு மாவட்டம், பி.மேட்டுப்பாளையம் (முதல்நிலை) பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய த. ராமச்சந்திரன் ஆகிய நான் பதவி உயர்வு மற்றும் பணியிட வழங்கி பணி மாறுதல் செய்யப்பட்டு வெள்ளோட்டாம்பரப்பு (முதல்நிலை) பேரூராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டு கடந்த 14.08.2024ம் தேதி முதல் பணியேற்பு செய்து கொண்டு, நாளது வரை நல்ல முறையில் பணியாற்றி வருகிறேன். மேற்காண் ஆணையில் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் பணியாற்றிய ஆர்.விஜயன் என்பவரை சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டம், அத்தனூர் பேரூராட்சிக்கு (முதல்நிலை) செயல் அலுவலராக பதவி உயர்வு மற்றும் பணியிட வழங்கி மாறுதல் செய்யப்பட்டு கடந்த 12.08.2024ம் தேதி முதல் விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இனி வரும் மன்ற கூட்டங்களில் இதுபோன்று புகார்கள் எழா வண்ணம் நிர்வாகம் செய்து கொள்கிறேன் என்ற உறுதிமொழியினை தங்களுக்கு வழங்குகிறேன் என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற அலுவலர் அவர்களுக்கு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 5வது வார்டு உறுப்பினர் ஆகியோர் 21.11.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திருமதி ச. சத்யா என்பவர் 21.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு மன்ற 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மன்றக் கூட்டம் நடைபெறும் போது மகளிர் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசி பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடந்து கொள்கிறார். மேலும், இவர் பேரூராட்சியின் இதர வார்டுகளில் தலையிட்டு வரம்பு மீறி செயல்படுகிறார். இவ்வாறு மகளிரிடம் மரியாதைக் குறைவாக நடந்துக் கொள்வது குறித்து 6வது, 7வது மற்றும் 13வது பேரூராட்சி மன்ற வார்டுகளை சார்ந்த மன்ற உறுப்பினர்களும் புகார் அளித்துள்ளனர். இவ்வாறு அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் நடந்துக் கொள்ளும் 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. மற்றொரு மனுதாரரான திருமதி பி. தவமணி என்பவர் 21.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு மன்ற 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மன்றக் கூட்டம் நடைபெறும் போது மகளிர் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசி பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடந்து கொள்கிறார். மேலும், இவர் எனது 13வது வார்டில் நடைபெறும் பேரூராட்சி செயல்பாடுகளில் தேவையில்லாமல் தலையிட்டு வரம்பு மீறி செயல்படுகிறார். இவ்வாறு அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளும் 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." .என தெரிவித்துள்ளார்.

7. 2வது மற்றும் 3வது மனுதாரர்களான திருமதி. ஜெ. சம்பூரணம் மற்றும் திருமதி. எஸ். கஸ்தூரி ஆகியோர் 21.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

8. எதிர்மனுதாரரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. த. இராமச்சந்திரன் என்பவர் 21.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு மன்ற 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மன்ற கூட்டம் நடைபெறும் போது மகளிர் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசி பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதாக மனுதாரர் புகாராக தெரிவிக்கும் காலத்தில் பணியாற்றிய பேரூராட்சி செயல் அலுவலர் திரு. R. விஜயன் என்பவர் சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டம், அத்தனூர் பேரூராட்சி (முதல் நிலை)யில் செயல் அலுவலராக பதவி உயர்வு பெற்று 12.08.2024 முதல் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். நான் இப்பேரூராட்சியில் 14.08.2024 அன்று முதல் செயல் அலுவலராக பணியாற்றி வரும் காலத்திலிருந்து 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம், என்பவர் மகளிரிடம் எவ்வித தரக்குறைவாக நடந்துக் கொள்ளவில்லை எனவும், எனினும், திரு. L. சண்முகம் என்பவர் பேரூராட்சியின் இதர வார்டுகளில் தேவையின்றி தலையீடு செய்து வருகிறார் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களிடம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9. மற்றொரு எதிர்மனுதாரரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் 21.11.2024அன்று இம்முறை மன்றத்தில் நடைபெற்ற விசாரணயில் ஆஜராகவில்லை.

10. இந்நிலையில், மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 6வது வார்டு உறுப்பினர் திருமதி ஜெ. சம்பூரணம் மற்றும் 7வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். கஸ்தூரி ஆகியோர் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் ஆகியோர் 12.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

11. மனுதாரர்களில் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 6வது வார்டு உறுப்பினர் திருமதி. ஜெ. சம்பூர்ணம் என்பவர் 12.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"“ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 5வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. எல். சண்முகம் என்பவர், மன்ற கூட்டம் நடைபெறும் போது பெண்களை இழிவு செய்யும் வகையில் வெளியில் சொல்ல முடியாத தகாத வார்த்தைகளை பேசுகிறார். மேலும் துப்புரவு பணியாளர்கள் முன்னிலையிலேயே இவ்வாறு நடந்து கொள்கிறார். பெண்களிடத்தில் ஏதாவது ஒரு வகையில் சாடை மாடையாக பேசி வீண் வம்பு செய்கிறார். இதனை புகாராக முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. விஜயன் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எனது வார்டில் தார் ரோடு மற்றும் பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது தேவையின்றி இடையூறு செய்து வரம்பு மீறி செயல்படுகிறார். இவ்வாறு அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் நடந்த கொள்ளும் 5து வார்டு உறுப்பினர் திரு. எல். சண்முகம் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

12. வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் என்பவர் தன்னுடைய கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 15 நாட்கள் மருத்துவம் பார்த்து வருவதாகவும், தன்னால் 12.12.2024 ஆம் தேதியன்று விசாரணைக்கு நேரில் வர இயலாது என்று தெரிவித்து, உரிய மருத்துவ சான்றினை அனுப்பியிருந்தார். மேலும் இம்முறைமன்றம் விசாரணைக்கு அழைக்கும் மற்றொரு நாளில், தான் நேரில் ஆஜராகிறேன் என்ற தகவலினையும் தெரிவித்திருந்தார்.

13. வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 7வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். கஸ்தூரி, மற்றொரு எதிர்மனுதாரர்களில் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் 12.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னால் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் என்பவரும் மருத்துவ காரணத்தினால் மேற்கண்ட நாளில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

14. எனவே, மேற்கண்ட மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் மனுதாரரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 7வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ். கஸ்தூரி, மற்றொரு எதிர்மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் ஆகியோர்களை 04.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

15. 04.02.2025 அன்று இம்முறை மன்றத்தில் நடைபெற்ற விசாரணையிலும் மனுதாரர்களுள் ஒருவரான 7வது வார்டு மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். கஸ்தூரி என்பவர் ஆஜராகவில்லை.

16. எதிர்மனுதாரர்களில் ஒருவரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் 04.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

> "ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. ச. சத்யா மற்றும் திருமதி. ஜெ. சம்பூரணம் 6வது வார்டு உறுப்பினர், திருமதி. எஸ். கஸ்தூரி 7வது வார்டு உறுப்பினர் மற்றும் திருமதி எஸ்.பி. தவமணி ஆகியோர் சமர்ப்பித்த புகார் மனுவில் மன்ற கூட்டம் நடைபெறும் போது, நான் மகளிர் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசி கண்ணிய குறைவாக நடந்து கொள்வதாகவும் இதர வார்டுகளின் செயல்பாடுகளில் தலையிடுவதாகவும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்த புகார் மனுக்களையும் மற்றும் மன்ற உறுப்பினர் திருமதி கஸ்தூரி தவிர மேற்காணும் மன்ற தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் சமர்ப்பித்த வாக்குமூலங்களையும் இன்று படித்து பார்த்தேன்.
>
> நான் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றத்தில் சுமார் 13 வருடங்களாக உறுப்பினராக நன்முறையில் பணியாற்றி வருகிறேன். பேரூராட்சியின் நிருவாக சிக்கல்களை சுட்டிக்காட்டியதன் விளைவாக என் மீது அபாண்டமாக பொய் புகார் அளித்துள்ளனர். மனுதாரர்கள் புகாராக தெரிவிப்பது போல் கண்ணியமற்ற முறையில்

நடந்து கொண்டிருந்தால் பேரூராட்சியின் பொது மக்களால் என்னை மன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்க இயலாது. என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் எனக்கு மன உளைச்சலை அளிக்கும் வகையிலும் வேண்டுமென்றே புகார் அளித்துள்ளனர். நான் எப்போதும் மரியாதையுடனும் நன்மதிப்புடனும் உறுப்பினராக செயலாற்றி வருகிறேன். இதற்கு ஆதாரமாக மன்ற CCTV பதிவுகளை ஆய்வு செய்வதன் மூலம் என்மீது உண்மைக்கு புறம்பாக புகார் தெரிவித்துள்ளதை அறிய முடியும். எனவே, என்மீது அளிக்கப்பட்டுள்ள புகார்கள் உண்மைக்கு புறம்பாக உள்ளன என்பதனை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

17. மற்றொரு எதிர்மனுதாரரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் என்பவர் 04.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 5வது வார்டு உறுப்பினர் திரு. எல். சண்முகம் என்பவர் மன்ற கூட்டம் நடைபெறும் போது மகளிர் உறுப்பினர்களிடம் தகாத வார்த்தைகளை பேசி பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடந்து கொள்கிறார் எனவும் பேரூராட்சியின் இதர வார்டுகளின் செயல்பாடுகளில் தலையீடு செய்கிறார் என்ற புகாரினை சமர்ப்பித்த பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் மூன்று மன்ற உறுப்பினர்கள் புகாராக தெரிவித்துள்ள காலக் கட்டத்தில் நான் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் சுமார் 3 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தேன். மனுதாரர்கள் புகாராக தெரிவிப்பது போல், மன்ற கூட்டம் நடைபெறும் போது மகளிரிடத்தில் ஆபாச வார்த்தைகளை பேசியதில்லை. இருப்பினும், மன்றக் கூட்டங்கள் நடைபெறும்போது கூட்டம் நடைபெறும் விதத்தினை ஏளனமாக பேசி தரக்குறைவாக நடந்துள்ளார். மேலும் திரு. எல். சண்முகம் பேரூராட்சியின் இதர வார்டுகளில் அவசியமின்றி தலையீடு செய்து வந்துள்ளார். புகாருக்குள்ளான எதிர் மனுதாரரான திரு. எல். சண்முகம் தெரிவித்துள்ளது போல் பேரூராட்சி மன்றத்தில் CCTV அந்த காலகட்டத்தில் செயல்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

18. மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. ச. சத்யா, 13வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். பி. தவமணி மற்றும் 6வது வார்டு உறுப்பினர் திருமதி. ஜெ. சம்பூரணம் மற்றும் 7வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ். கஸ்தூரி ஆகியோர்களின் புகார் மனுக்கள் மற்றும் வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், மற்றொரு எதிர்மனுதாரர்களான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் மற்றும் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தற்போது நாமக்கல் மாவட்டம், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. R. விஜயன் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

19. ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி ச. சத்யா மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களான திருமதி. ஜெ. சம்பூரணம், திருமதி எஸ். கஸ்தூரி மற்றும் திருமதி எஸ். பி. தவமணி ஆகியோர் தங்களது 31.07.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பேரூராட்சியின் 5து வார்டு மன்ற உறுப்பினரான திரு. L. சண்முகம் என்பவர் பேரூராட்சி மன்ற கூட்டம் நடைபெறும் போது மகளிர் உறுப்பினர்களிடம் பெண்களை இழிவுப்படுத்தும் வகையில்

தகாத வார்த்தைகளை பேசி கண்ணிய குறைவாகவும் மற்றும் மரியாதை குறைவாகவும் நடந்து கொள்கிறார் எனவும், சம்பந்தமில்லாமல் பிற வார்டுகளில் தலையிட்டு வரம்பு மீறி செயல்படுகிறார் எனவும் மனுதாரர்களின் புகார் மனுக்கள் மற்றும் வாக்குமூலங்களில் தெரிவித்துள்ளனர்.

இப்புகாரினை குறித்து வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. த. ராமச்சந்திரன் என்பவர் தான் பணியிட மாற்றமாக 14.8.2024 அன்று முதல் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், புகாராக தெரிவிக்கும் காலக் கட்டத்தில் திரு. R. விஜயன் என்பவர் செயல் அலுவலராகப் பணிபுரிந்ததாகவும் தெரிவித்து, திரு. L. சண்முகம் என்பவர் தனது காலத்தில் மகளிரிடத்தில் எவ்வித தரக்குறைவாக நடந்து கொள்ளவில்லை எனவும், இருப்பினும் பேரூராட்சியின் இதர வார்டுகளில் தலையிட்டு வருகிறார் என்பதை தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்மனுதாரரும் பேரூராட்சி மன்ற 5வது வார்டு உறுப்பினருமான திரு. L. சண்முகம் என்பவர் தான் பேரூராட்சியில் 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 13 வருடங்களாக உறுப்பினராக செயல்பட்டு வரும் நிலையில், பேரூராட்சியின் நிருவாக சிக்கல்களை சுட்டிக்காட்டியதன் விளைவாக தன் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி மற்றும் தனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் தன் மீது அபாண்டமாக புகார் அளித்துள்ளனர். மகளிரிடத்தில் கண்ணிய குறைவாக நடந்து கொண்டால் மக்களால் தன்னை உறுப்பினராக தேர்ந்தெடுக்க முடியாது எனவும், தான் மன்ற கூட்டத்தில் நடந்து கொண்ட விதத்தினை பேரூராட்சி மன்ற CCTV மூலம் செய்யப்பட்ட பதிவுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம் எனவும் உண்மைக்கு புறம்பாக புகார் அளித்துள்ளனர் என அவரது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி மன்ற உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மீது சுமத்தப்பட்ட புகார் குறித்து புகாராக தெரிவிக்கும் காலத்தில், பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. R. விஜயன் என்பவர் தனது வாக்குமூலத்தில் மன்ற கூட்டம் நடைபெறும் போது திரு. L. சண்முகம் என்பவர் ஆபாச வார்த்தைகள் பேசியதில்லை எனவும், ஆனால் கூட்டம் நடைபெறும் விதத்தினை ஏளனமாக பேசி தரக் குறைவாக நடந்து கொண்டுள்ளார் எனவும், திரு. L. சண்முகம் என்பவர் பிற வார்டுகளில் அவசியமின்றி தலையீடு செய்து வந்துள்ளார் என தெரிவித்த நிலையில், பேரூராட்சி மன்றத்தில் CCTV, புகாராக தெரிவிக்கும் காலக் கட்டத்தில் செயல்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரரான வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சி மன்ற 8வது வார்டு பெண் உறுப்பினரும் மற்றும் மன்றத் தலைவருமான திருமதி ச. சத்யா என்பவரும் மற்றும் 6வது, 7வது மற்றும் 13வது வார்டு பெண் உறுப்பினர்கள் என 4 மகளிரும் தங்களது புகார் மனுவில் 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மன்ற கூட்டங்கள் நடைபெறும் போது பெண்களிடத்தில் ஆபாசமாக பேசி கண்ணியக்குறைவாக நடந்து கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், புகாருக்குட்பட்ட காலக்கட்டத்தில் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. விஜயன் என்பவர் தனது வாக்குமூலத்தில் திரு. L. சண்முகம் என்பவர் பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெறும் போது மகளிரிடத்தில் ஆபாச வார்த்தைகளை பேசியதில்லை எனவும், இருப்பினும் கூட்டம் நடைபெறும் விதத்தினை ஏளனமாக பேசி தரக்குறைவாக நடந்துள்ளார் என தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் தொடர்பாக பேரூராட்சி மன்றத்தில் நிகழ்ந்தவற்றை உறுதிபடுத்தும் வகையில் ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற போதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நான்கு பெண் உறுப்பினர்களின் புகாரினை ஆதாரமற்றது என்று புறந்தள்ள இயலவில்லை. எனவே, புகாருக்குள்ளான மூன்று முறை பேரூராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி மன்ற 5வது வார்டு உறுப்பினர் திரு. L. சண்முகம் என்பவர் மன்றத்தில் செயலாற்றும் நேரங்களில், உறுப்பினர்களிடம்

குறிப்பாக பெண் உறுப்பினர்களிடம் மரியாதையாகவும், கண்ணியமாகவும் பேசும்படியும் தான் ஒரு மக்கள் பிரதிநிதி என்பதை கருத்திற் கொண்டு மன்றத்தின் மாண்பினை காக்கும் வகையில் செயல்பட அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறா வண்ணமிருக்க, பேரூராட்சி மன்றக் கூட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் CCTV பொருத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மார்ச் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி ச. சத்யா,
தலைவர், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
10, துண்டுக்காட்டூர்,
கொளாநல்லி அஞ்சல், பாசூர் வழி,
ஈரோடு மாவட்டம்.

2) திருமதி ஜெ. சம்பூரணம்,
6வது வார்டு உறுப்பினர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3) திருமதி எஸ். கஸ்தூரி,
7வது வார்டு உறுப்பினர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

4) திருமதி எஸ். பி. தவமணி,
13வது வார்டு உறுப்பினர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

5) செயல் அலுவலர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

6) திரு. R. விஜயன்,
(முன்னாள் செயல் அலுவலர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி, ஈரோடு மாவட்டம் (தற்போது)
செயல் அலுவலர், அத்தனூர் முதல்நிலை பேரூராட்சி
நாமக்கல் மாவட்டம்.

7) திரு. L. சண்முகம்,
5வது வார்டு உறுப்பினர், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
20, சாணாம்புதூர் மேற்கு வீதி,
கொளாநல்லி அஞ்சல்,
பாசூர் வழி, ஈரோடு மாவட்டம்.

8) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

9) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032